நாள்- 11.07.2023
Case No. OS.105/2017 (PW1 Cross )
PW.1- குமரவேல் – பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

முதல் பிரதிவாதி கருணாநிதி என்னுடைய தம்பி என்றால் சரிதான். 2, 3 வாதிகள் என்னுடைய தம்பிகள் என்றால் சரிதான். என்னுடைய சகோதரி கலா (எ) கலைவாணி என்பவர் இருந்தார் தற்போது இறந்துவிட்டார். 2 முதல் 6 பிரதிவாதிகள் இறந்துவிட்ட கலா (எ) கலைவாணியின் வாரிசுகள் என்றால் சரிதான். வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் அனைவரும் என் தந்தை சிவசண்முகத்தின் பிள்ளைகள் என்றால் சரிதான். 1992 லிருந்து நானும் என்னுடைய உடன்பிறப்புகளும் தனித்தனியாக இருக்கிறோம் என்றால் சரிதான். நான் திமிரியில் வசிக்கிறேன். 2ம் வாதி ஜோதி கர்நாடகா மாநிலத்தில் சிக்மங்களூரில் வசித்து வருகிறார். 3ம் வாதி என்னுடைய கிராமத்தில்தான் வசித்து வருகிறார். என் சகோதரி கலா (எ) கலைவாணி ராமபாளையத்தில் திருமணம் செய்து கொடுத்து 1982 ல் இறந்துவிட்டார். என்னுடைய தகப்பனார் சிவசண்முகம் 2004 ல் இறந்துவிட்டார். தாவாவில் உள்ள முதலாவது அயிட்ட சொத்து 1 ஏக்கர் 89 செண்ட் உள்ளது. 2 வது அயிட்ட சொத்து வீடு ஆகும். முதல் அயிட்டத்தில் சொல்லப்பட்டுள்ள நிலங்கள் என்னுடைய அப்பா பெயரில் உள்ளது என்றால் என்னுடைய தாத்தா பெயரில் உள்ளது. வா.சா.ஆ.1 முதல் 3 என் அப்பா பெயரில் உள்ள கிரைய பத்திரங்கள் என்றால் இல்லை. வா.சா.ஆ.1 முதல் 3 ஆவணங்கள் வழக்கு சொத்துக்கான பத்திரங்கள் என்றால் சரிதான். என் அப்பா பெயரில் உள்ள கிரைய பத்திரங்கள் என்றால் சரிதான். என் அப்பா வா.சா.ஆ.1 முதல் 3 உள்ள சொத்துக்களை சித்தூரில் உள்ள சொத்துக்களை விற்று வாங்கினார் என்று நான் சொல்கிறேன் என்றால் சரிதான். என் அப்பா கிராமத்தில் கடை வைத்திருந்தார் என்றால் சரிதான். கடையிலிருந்து வந்த வருமானத்தை வைத்துதான் என் அப்பா எங்களை வளர்த்தார் என்றால் சரிதான். சித்தூரிலிருந்து சொத்தானது என் அப்பாவினுடைய அம்மாவின் பெயரில் இருந்தது. என் பாட்டியின் பெயர் குப்பம்மா அவர்களுக்கு அவரது தாய் வீட்டிலிருந்து அந்த சொத்து கிடைத்தது. என் பாட்டியின் தாய் வீட்டிலிருந்து சொத்து வந்தது என்பதற்கான பத்திரம் உள்ளது பற்றி தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. என் பாட்டி குப்பம்மாளுக்கு என் தகப்பனாருடன் சேர்த்து 4 பிள்ளைகள் என்றால் சரிதான். என் பாட்டி குப்பம்மாள் சொத்துக்களை சக்குபாய்க்கு 1967 ல் தானசெட்டில்மெண்ட் எழுதி கொடுத்தார் என்றால் சரிதான். அதே சொத்தினை சக்குபாய் என் அப்பாவுக்கு தானசெட்டில்மெண்ட் எழுதி கொடுத்தார் என்றால் சரிதான். செட்டில்மெண்ட் மூலமாக கிடைத்த சொத்தினை என் அப்பா 1984 ல் கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். சித்தூரிலுள்ள சொத்துக்களை விற்று தாவாவில் உள்ள 1 வது அயிட்ட சொத்துக்களை எப்போது கிரையம் பெற்றார் என்றால் 1987 ல் கிரையம் வாங்கினார். தற்போது 1ம் பிரதிவாதி பெயரில் தாவா 1 வது அயிட்ட சொத்து உள்ளது என்றால் எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதிதான் அந்த சொத்தில் பயிர் வைத்துள்ளார் என்றால் சரிதான். என் அப்பா 1 வது பிரதிவாதிக்கு எந்த வருடம் உயில் எழுதி வைத்தார் என்றால் உயில் எழுதி வைத்தது நான் கேள்விபட்டேன் என்னிடம் காண்பிக்கவில்லை, எந்த வருடம் எனக்கு தெரியாது. என் அப்பா உயில் எழுதி வைத்து எத்தனை வருடம் கழித்து இறந்துவிட்டார் என்றால் 2004 ல் என் அப்பா இறந்துவிட்டார். 2004 லிருந்து 1 வது பிரதிவாதிதான் அந்த சொத்தினை அனுபவித்து வருகிறார் என்றால் இல்லை, என் அப்பா இறந்தபிறகு நாங்கள் கூட்டுக்குடும்பமாக

இருந்தோம், 2017 லிருந்துதான் சொத்தை அனுபவித்து வருகிறார். கூட்டுக்குடும்பமாக இருந்தோம் என்றால் தனித்தனியாகத்தான் இருந்தோம், ஆனால் வருமானத்தை மட்டும் பிரித்துக்கொண்டாம். 1வது அயிட்ட சொத்தில் 1ம் பிரதிவாதி கருணாநிதிதான் பயிர் வைத்தார் . வருமானத்தை பிரித்து கொடுத்தற்கான ஆதாரம் உண்டா என்றால் இல்லை. வழக்கின் 1வது அயிட்ட சொத்திற்கு வரி எதுவும் நான் கட்டவில்லை. 1ம் பிரதிவாதி கருணாநிதிதான் வரி கட்டுகிறார் என்றால் சரிதான. தாவாவில் 2வது அயிட்ட சொத்தில் யார் குடியிருக்கிறார் என்றால் யாரும் குடியிருக்கவில்லை காலியாகத்தான் உள்ளது. 2வது அயிட்ட சொத்து என் அம்மாவிற்கு சொந்தமான சொத்து. அதில் அனைவருக்கும் பாகம் உள்ளது என்றால் சரிதான். 2வது அயிட்ட சொத்தை பொருத்தவரை பாகம் பிரிப்பதில் 1ம் பிரதிவாதிக்கு எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லை என்று சொன்னால் சரிதான். என் அப்பா இறக்கும்வரை 1ம் பிரதிவாதிதான் பராமரித்து வந்தார் என்றால் வரும் வருமானத்தை வைத்துதான் 1ம் பிரதிவாதி பார்த்துக்கொண்டார். நிலத்தில் வந்த வருமானத்தை வைத்துதான் 1ம் பிரதிவாதி என் அப்பாவை பராமரித்து வந்தார். 1993ல் என் அம்மா இறந்தபிறகு என் அப்பாவை 1ம் பிரதிவாதிதான் பராமரித்து வந்தார். 1ம் பிரதிவாதி பெயருக்கு என் அப்பா உயில் எழுதியதை எனக்கு பாகம் கிடைக்க எனக்கு உரிமையில்லை என்று சொன்னால் உயில் எழுதியதை 1ம் பிரதிவாதி கருணாநிதிதான் சொன்னார் நான் பார்க்கவில்லை. தாவாவில் 1 அயிட்ட சொத்து பொருத்தமட்டில் என் அப்பா கிரையம் பெற்ற சொத்து என்றும் அதில் உயில் எழுத அவருக்கு உரிமை உண்டு என்று சொன்னால் சரியல்ல, என் அப்பாவுக்கு அவரது பாட்டி கொடுத்த சொத்து அதன்மூலம் கிரையம் பெற்ற சொத்தாகும். என் பாட்டியின் மூலம் கிடைத்த சொத்து பூர்வீக சொத்து இல்லை என்றால் சரியல்ல. 1ம் அயிட்டம் சொத்து பொருத்தமட்டில் எங்களுக்கு பாகம் கேட்க உரிமையில்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி அவரது பெயரில் உயில் உள்ளதாலும்கடந்த 12 வருடங்களாக அந்த சொத்தை அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. வழக்கினை காலத்தாமதமாக தாக்கல் செய்துள்ளதால் நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. 2ம் அயிட்ட சொத்து பொருத்தமட்டில் பாகப்பிரிவினை 1ம் பிரதிவாதிக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை– இல்லை.